முத்தமிழ் முழங்குக

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு

இருபத்தொன்றாம் துணர்

பார்த்திப ஆண்டு—1945, 46.

பொழிலாசிரியர்

வித்துவான். கோ. சி. பெரியசாமிப் புலவர் அவர்கள்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

தமிழ்ப் பொழில்

இருபத்தொன்றும் துணர் :—உள்ளுறை

1 திரு. வித்துவான், வே. வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள்
சிறுசோறு 4, 131, 241

2 திருவாட்டி, சு. கரும்படுசொல்லி அம்மையார் திருவையாறு
காரைக்காலம்மையார் 11

3 திரு. பண்டித, வித்துவான், லெப. கரு. இராமநாதன் செட்டியார்
அவையத்தார் இயல்பு 13

4 மகாமகோபாத்தியாய பண்டிதமணி,
திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அண்ணாமலைநகர்
எயில்கோடல் 29, 61
இன்பம் 66
செய்யுட் கடிதங்கள் 219
சிலப்பதிகாரக் காப்பிய இலக்கணம் 261

5 திரு. K. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A., B.L., தஞ்சை
எண்ணும் எழுத்தும் 33
மானமாவும் நன்மாவும் 111
ஊழ்வினையும் ஆள்வினையும் 169
வாழ்க்கைச் சிற்பம் 244

7 திரு. த. பு. நவநீதகிருட்டினன் அவர்கள் அண்ணாமலைநகர்
பிரிட்ஜவின் கல்லூரித் தோட்டம் 38

8 திரு. வித்துவான், ந. ஆறுமுகம் அவர்கள்
பெயர் நிலைக்கிளவி 50
காலஞ்சென்ற திரு, கா, சுப்பிரமணியபிள்ளை M.A., M.L., அவர்கள்
தமிழ்ப்புலவர் மாநாட்டின் தலைமை உரை 57

9 திரு. வித்துவான், ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள்
ஔவையாரும் பாரிமகளிரும் 41
தமிழ்வேந்தர் 85: 105

10 திரு. இராவுபகதூர் A. Y. அருளானந்தசாமி நாடார் அவர்கள்
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர்
தமிழ்நாடு நாடகக்கலை இரண்டாவது மாநாட்டின் வரவேற்பு உரை 63
தமிழ்நாடு மூன்றாவது நாடகக்கலைமாநாட்டின் தலைமைஉரை 284
தஞ்சை மாவட்டத் தமிழிசை மாநாட்டுத் தலைமை உரை 140

11 திரு. பண்டித P. R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M. A.,
ஆர்நாலடி 68

12 திரு. ஆ. வ. இராமநாதன் செட்டியார்
படிக்காசுத் தம்பிரான் 75

13 திரு. பாலூர், வித்துவான் து. கண்ணப்ப முதலியார்
திருவல்லிக்கேணி, சென்னை
சேக்கிழாரும் கம்பரும் 89, 109

14 திரு. N. இலட்சுமண முதலியார், கூட்டுறவு ஆசிரியர், கோவை
கரந்தைத் தமிழ்ச் சங்கமும் கவிதாகூரும் 103

15 வித்துவான் S. பொன்னுசாமி அவர்கள்
வீரம் 116

16 திரு. வித்துவான் சே. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆரியன் தமிழ்புலமை 134

17 திரு. ச. கணபதி அவர்கள்
கொல்லிமலைச் செலவு 144, 161, 193, 232, 257
தொண்டின் பெருமை 297, 333

18 திரு புலவர் ந. சுப்பராய பிள்ளை அவர்கள்
அறுதொழில் 148

19 மறைத்திரு மாணிக்கவாசகத் தம்பிரான் அவர்கள்
சமய வாழ்வு வேண்டுமா? 160, 183, 192

20 திரு நல்லை. அ. இளங்கோவன் அவர்கள்
எங்கள் தமிழ் 176

21 திரு ம. சிவகுருநாதன் அவர்கள்
கரந்தையும் கொச்சியும் 178

22 திரு வித்துவான் கு. சின்னையன் அவர்கள்
கூத்தராற்றுப்படை 201, 229

23 திரு வித்துவான், பழனிமுதலியார் அவர்கள்
திருக்குறட் சிறப்பு 206, 225

24 திரு பண்டித சி. சுப்பிரமணியன் அவர்கள்
கையார் கணைசென்றதால் கண்ணிற் றெரியக் காணேன், 245

25 திரு சுர்தேவதாஸ் அவர்கள்
திருக்குறள் ஆராய்ச்சி 246

26 திரு நாவலர், பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M. A. B. L.
எது தமிழ் இலக்கியம் 248, 295

27 தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார்
தமிழ் நாட்டின் வட எல்லை, 252, 254

28 திரு மு. கோவிந்தசாமி அவர்கள்
தொல்காப்பியக் கடவுள் 267

29 ச வே தில்லைவனம் அவர்கள்
காணுப் பொருள் 270

30 திரு K. கோதண்டபாணி அவர்கள்
மாடலன் மறைமொழி 272

31 திரு வித்துவான் K. கோவிந்தன் அவர்கள்
எம்மனோர் இல் செம்மலுமுடைத்தே 276

32 திரு E. R. நரசிம்ம ஐயங்கார் அவர்கள் B. A. B. L.
தமிழ் நெறி விளக்க ஆராய்ச்சி 279, 289

33 திரு வித்துவான் கோ. சி. பெரியசாமிப் புலவர் அவர்கள், பொழிலாசிரியர்
பொழிலாசிரியர் கருத்துரைகள் 1, 2, 25, 28, 37, 48, 49, 50, 52, 67, 73, 74, 97, 102, 104, 121, 153, 177, 215, 217 249, 281,
வரலாற்றுப்பகுதி 154, 185, 298, 343

34 திருவாட்டி மே. மாசில்லாமணி அம்மையார் M, A. L. T. அவர்கள் சென்னை
குற்றம் குற்றமே 321

35 சங்க வாழ்த்துக்கள் 230, 232,

36 திரு ஆசிரியர் புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், தோரமங்கலம்
பெரிய புராண நாடகப் பகுதிகள் 339

37 திரு K. சுப்பையா அவர்கள்
தமிழ்த்தொண்டர் மாநாட்டின் வரவேற்புரை 345

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உக — பார்த்திப—சித்திரை—1945—ஏப்பிரல் — மலர் க

இருபத்தொன்றாந் துணர் இன் மலர் சிறக்க!

தமிழ்ப் பொழிலின் இருபதாந் துணர் தாரண ஆண்டு, பங்குனித் திங்களோடு நிறைவெய்தி, இப் பார்த்திப ஆண்டின் தொடக்கத்தே இருபத்தொன்றாந்துணர் தொடங்கப்பெறுகிறது. நம்தமிழ்ப்பொழில் தொடங்கப்பெற்ற இவ்விருபது ஆண்டுகளாகத் தமிழ்ச் செல்வர்களும், தமிழ்ப் புலவர்களும், நாட்டாண்மை, நகராண்மை, ஊராண்மைக் கழகத் தலைவர்களும், தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரித் தலைவர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் பொழிலின் வளர்ச்சி வேண்டிப் பொருணீர் பாய்ச்சிப் பொழில் நிழலமர்ந்து, பொழிலின் இனிய மலர்களை நுகர்ந்தும், நறுங்கனிகளை உண்டும் மகிழ்ந்து தேக்கெறிந்து, பல்லாறாக வாழ்த்திப் போற்றினார்கள். இங்ஙனம் போற்றி ஆதரித்த பெருமக்கள் எல்லோர்க்கும் எம் உளமார்ந்த நன்றியை அறிவிக்கின்றேம்.

உலகப் பெரும் போர் காரணமாக பொழிலின் பக்கங்களையும் குறைத்து, அளவையுங் குறைத்து, அச்சிடுதற்குரிய நெருக்கடிக்குள்ளானேமாயினும் இவற்றைப் பொருட்படுத்தாது பொழில் உறுப்பினர்கள் பொழில் வளர்ச்சியில் நாட்டங்கொண்ட தமிழ் மக்கள் பொழிலுக்கு முன்பணம் அனுப்பி, பொழில் உறுப்பினராம் பேற்றினை வலிய ஏற்று நிற்கும் பற்றினைக் கண்டு, யாம் மிக்க மகிழ்கின்றோம். இத்தகு நன் மக்களுடைய முயற்சியினானும், ஆதரவினானும் பொழில் தழைத்தோங்கித் தனித்திலங்கித் தமிழ் மொழிக்குப் பெரு நலன் விளைக்குமென எண்ணுகின்றோம். உலக நாகரிகத்திற்குப் பகைஞராய்த் தோன்றியுள்ள கொடியோர் அழிவுற்று, உலகப் பெரும் போர் முடிவுற்று, தாள் கட்டுப்பாடும் தளர்வுற்று நலன் பெருகுமானால் மீண்டும் பொழிலைச் சிறப்புற வெளியிடலாமென, பொழிலன்பர்கட்கு அறிவிக்கின்றோம். பொழிலன்பர்கள் ஆதரித்துப் போற்றுவார்களாக! உலகப் பெரும்போர் முடிவுற்று, இப் பார்த்திப ஆண்டில் பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரந்து மக்கள் மகிழ்கொள வேண்டி இப் பார்த்திப ஆண்டினைப் பாங்குற இறைவனை வழுத்தி வரவேற்கின்றோம்.

வாழ்க தமிழ்மொழி! வாழியர் தமிழர்!!

ஆசிரியர், திரு. அ. வரதநஞ்சையப் பிள்ளை

புலவர் ஏறு ஆனார்.

நம் சங்க வெள்ளி விழாவில் "**தமிழரசி குறவஞ்சி**" என்னும் இனிய நூலைப் பாடி அரங்கேற்றியவரும் சிறந்த புலமையையும் சொல்லாற்றலின் சீர்மையையும் கண்டு வியந்து நம் சங்கத்தாரால் "**ஆசிரியர்**" எனச் சிறப்புப்பெயர் வழங்கப்பெற்றவரும் ஆகிய தோரமங்கலம்ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சையப்பிள்ளை அவர்களைப் புலவர் உலகம் நன்கறியும். இப்பெரும் புலவர் நம் சங்கத்தோடு தொடர்பு கொண்டு பல்லாண்டுகளாகத் தமிழ்ப்பொழிலுக்குக் கட்டுரை எழுதியும், ஆண்டு விழாக்களிற் சொற்பொழிவாற்றியும் சங்கத்தின் 32-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் தலைமை தாங்கியும் சிறப்பித்தார்கள். எல்லோரிடத்தும் அன்பு கலந்த உள்ளத்தோடு பழகி இன்னுரை வழங்கி "உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்" என வள்ளுவர் கூறிய வாய்மொழிக்கு இலக்கெனத் திகழும் இன் குணச் செல்வர் இவராவர். பண்டைப் புலவர் பெருமக்கள் இவ்வாறு இருப்பர் என யாம் எண்ணும் வண்ணம் வஞ்சங் கலவாத நெஞ்சோடுகூடிய வள்ளற்புலவர் நம் வரதநஞ்சையப் பிள்ளையாவார்கள். இத்தகு பெற்றிமையெல்லாம் ஒருங்கமைந்த நம் பிள்ளையவர்களுக்குத் தமிழ்ப் பண்ணை, (மேட்டூர் அணை) நிலைய அமைச்சர் **புத்தனேரி இரா. சுப்பிரமணியன் அவர்களின்** அரிய முயற்சியால் நிகழ்ந்த தமிழ் இலக்கியத்தொடர் விழாவில் (30—3—45-ஆம் நாளில்) சேலம் கல்லூரித் தலைவர் **திரு. அ. இராமசாமிக் கவுண்டர் M. A., L. T.,** அவர்களின் சீரிய தலைமையில் புலவர், **ஞா. தேவநேயப் பாவாணர், "சிவ நெறிச் செஞ்சொற் கொண்டல்" திரு. இளவழகனார்** முதலிய புலவர் பெருமக்கள் பாராட்டெடுப்ப, "**புலவர் ஏறு**" என்ற பட்டம் அளிக்கப்பெற்றமை கேட்டு யாம் மிக மிக மகிழ்கின்றோம்.

"**ஏறு**" என்ற சொல் தொல்காப்பியனாராலும் திருவள்ளுவனாராலும் எடுத்தாளப்பட்டுள்ளது. ஆசிரியர் தொல்காப்பியனார் மரபியலுள் "ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கெல்லாம், ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப" எனக் கூறினர். உரையாசிரியர் ஆற்றலுடைத்தாகிய ஆண்பாற்கெல்லாம் ஏற்றையென்னும் பெயர் உரித்தென்று உரை வரைந்தார். வள்ளுவனார் "புகழ்புரி.................. ஏறு போற்பீடுநடை" என்றும்

"படை குடி கூழமைச்சு நட்பரணாறும்
உடையான் அரசருள் ஏறு" என்றும் இச்சொல்லைத் தம் நூலகத்தே வழங்கியுள்ளார். "பெருமித முடையானுக்குச் சிங்கவேறு நடையாதுவமமாகலின் ஏறுபோல் என்றார்" எனப்பரிமே லழகரும் ஏறு

தொல்காப்பியனுர் கருத்தின் வண்ணமும் திருவள்ளுவனுர் கருத்தின் வண்ணமும் உரையாசிரியார், பரிமேலழகர் கருத்தின் வண்ணமும் ஏறு என்ற சொல் ஆற்றலின் மிக்க ஆடூஉ விற்கே உரித்தாதல் வேண்டுமென்பது பெறப்பட்டது. நம் ஆசிரியர் வரத நஞ்சையப் பிள்ளை புலமையாற்றலில் புலவர்க்குப் புலவராம் பேராற்றல் படைத்தவராதலினுலே திருவள்ளுவர் "அரசருள் ஏறு" என்று பேரரசிற்கு இலக்கணங் கூறினுற் போலப் "புலவருள் ஏறு" எனக் கண்டு மேட்டூர், தமிழ்ப் பண்ணையார் "புலவர் ஏறு" எனும் பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தனர். இப்பட்டத்திற்கு இப் பெரியார் மிகுதியும் பொருத்த மானவர், தகுதியுடையவர், ஆதலின் இப்பட்டம் இவர்க்கு வழங்கப் பட்டமை குறித்து யாம் மீண்டும் மகிழ்கின்ருேம். தமிழன்னையை வணங்கி வாழி **புலவருள் ஏறு, ஆசிரியர். அ. வரத நஞ்சையர்** என வாழ்த்துகின்ருேம்.

இங்ஙனம்,
பொழிலாசிரியர்.

கரந்தைப் புலவர் கல்லூரி.

இவ்யாண்டு வேனில் விடுமுறைக்குப் பின்பு 28—6—45 ம் நாள் கல்லூரி வேலை தொடங்கும். வித்துவான் தேர்வுக்குரிய ஐந்து வகுப்புக்களும் தற்போது இங்கு இருக்கின்றன. பல்கலைக்கழகம், அரசியலார் ஆகிய இரு இடத்திலும் ஒப்பம்பெற்று நம் கல்லூரி இணைப்புற்றுள்ளது. மாணவரது படிப்பு, உடல்நலம், வாழ்க்கை முதலியவற்றிற்கு வேண்டிய நல்லாசிரியர் துணையும், இயற்கை வளனும், இட அமைப்பும், நூல் நிலையமும் வாய்க்கப் பெற்றது நம் கல்லூரியாகும். வித்துவான் புகு நிலை வகுப்பிற்கு ஆங்கிலத்தில் பள்ளியிறுதித் தேர்வு (S. S. L. C.) தகுதியுடைய மாணவரே தேர்ந்தெடுக்கப்பெறுவர். 31—5—'45 க்குள் விண்ணப்பங்கள் கல்லூரித் தலைவர் முகவரிக்கு வந்து சேரல் வேண்டும். 1. நன்னடை 2. செல்வநிலை 3. படிப்பின் தகுதி முதலியவற்றிற்குத் தக்க சான்றுகளுடன் கல்லூரியில் கொடுக்கப்பெறும் விண்ணப்பத் தாளில் விண்ணப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

புகு நிலையிற் சேர்ந்து பயிலும் தகுதியில்லாத அகவை குறைந்த மாணவர்க்கெனத் தனி வகுப்புக்கள் தொடங்கப்பெறும். அவை அரசியலாரது ஒப்பம் பெற்றனவாகும். ஆங்கிலம், கணக்கு, சரித்திரம், பொது அறிவு, பூகோளம் முதலிய பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்பெறும். இப்படிப்பில் தேர்பவர்கள் ஆங்கிலக்கல்லூரிக்குப் போவதற்கும் வாய்ப்புள்ளது. இவ்வகுப்பில் சேரவிரும்பும் மாணவரும் மேற்குறித்த முறையில் விண்ணப்பிக்க வேண்டும். குறைந்தது ஐந்தாம் வகுப்பாவது தேர்ச்சியுற்றிருக்க வேண்டும்.

நல்லொழுக்கமும், வறுமையும், படிப்பாற்றலும் உள்ள மாணவர்க்குக் கட்டணமின்றி உண்டியும் உறையுளும் உதவப்பெறும்.

விளக்கு, புத்தகம், உடை முதலிய பிற வசதிகளை மாணவரே செய்து கொள்ளல் வேண்டும்.

குறிப்பு :— விண்ணப்பத்தாள் வேண்டுவோர் கல்லூரித் தலைவரிடம் நேரிலோ அன்றி 0—0—9 அஞ்சல் தலை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

31—5—'45 க்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்பெறமாட்டா.

பண்டித. P. R. **மீனாட்சிசுந்தரம் பிள்ளை** M. A.,
தலைவர், கரந்தைப் புலவர் கல்லூரி.
தஞ்சை.

சிறு சோறு

வித்துவான். வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

(முற்றொடர்ச்சி: துணர் ௨௰, மலர் ௰௧, பக்கம் 199.)

பகைத்தொகை.

மக்களுள் ஒரு நாட்டவர் மற்றொரு நாட்டினரோடு கூடி வாழ நேர்ந்தவிடத்து, அவர்தம் பழக்கவழக்கங்கள் விரவுதல் இயல்பு. அவ்வாறே அவர்தம் மொழிகளிலும் சொற்கள் விரவி வழங்கும். கலைவளன் பெற்றிலாத மொழிகள் கலைவளன்மிக்க மொழிகளி லிருந்து கருத்துக்களையும் சொற்களையும் மேற்கொள்ளுதலும் இயல் பின் நிகழ்வதுவே. இவ்வுண்மை அனைவருக்கும் ஒப்ப முடிந்ததே யாகும்.

நம் நாட்டில் ஆரியர் புகுந்தபின் அவர் தம் வழக்கங்களும் கொள்கைகளும் நம் முன்னோரால் மேற்கொள்ளப்பட்டன. அதனால் அவர் மொழியிலுள்ள சொற்களும் எடுத்தாளப்பட்டன. ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தின் முன்னரே நமது மொழியில் ஆரிய மொழிச் சொற்கள் வழங்கியுள்ளன. இஃது அவர்,

[1]இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே'

என்று கூறியிருப்பதனால் அறியலாகும். ஆயின், அக்காலத்தில் தமி ழில் வழங்கிய வடசொற்களுட் பொதுவெழுத்துக்களால் அமைந் தனவே பெரும்பாலன என்பதும் வடவெழுத்துக்களையுடைய சொற்க ளுள் வழங்கியன தமிழோடியைந்து வழங்கத்தக்கன சிலவே என்பதும்,

[2]'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே'.
[3]'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்'

---

1. சொல் எச்சவியல்
2. „ „
3. „ „

என்னுஞ் சூத்திரங்களால் அறியலாகும். தமிழோடியைந்து வழங்கத் தக்கன— நிதி, தசம், தனம், குணம் என்பனபோல்வனவாகும்.

> [4]'வாணன் வைத்த விழுநிதி பெறினும்'
> [5]'தசநான் கெய்திய பணைமரு ளேனுள்'
> [6]'தனந்தரு நன்கலஞ் சிதையத் தாக்கும்'
> [7]'அன்ன இனியோள் குணனு மின்ன'

என்று, பண்டைச் செய்யுட்களில் வந்திருப்பன காணலாம். தொல்காப்பியனார் கூறிய இம் முறையின் மாறி, தமிழ்ச்சொல்லோடு இயைந்து வழங்காதனவும் பிற்பட்ட இலக்கியங்களில் வழங்கலாயின.

தெலுங்கு கன்னட மொழிகளில் வடசொற்கள் தமிழ் மொழியினும் மிகப்பல வழங்கப்பட்டுள்ளன. ஆயின், அவற்றை எடுத்தாளுதலில் அம்மொழிகளில் நியதி உளது. அதனை நோக்குவோம்:

கன்னட மொழியில் இக்காலத்திலுள்ள நூல்களுள் முதலாமதாகிய '**கவிராஜ மார்க்கம்**' என்னும் அணியிலக்கண நூல் கூறுவது:

[8]'வடசொற்களையும் கன்னடச் சொற்களையும் தொகைநிலைத் தொடரில் விரவிக்கூறின், அது, கொதிக்கின்ற பாலோடு மோர்த் துளிகளைக் கலந்ததுபோன்று சுவையிலதாகும்'

> [9]'அரசு குமாரனனுயத
> தரகடெகண்ணிந்தெ நோடி கௌதிசமேதம்
> பரிகது நகெயிந் திர்த்தெம்
> குருநாண்பரதிந்த மெறகி முகதாவரெயம்'

என்னுஞ் செய்யுளில், அரசு முதலிய கன்னடச்சொற்களும் குமாரன் முதலிய வடசொற்களும் விரவிநிற்றல் குற்றம். அச்செய்யுளையே

> 'நரபதிதனயன னுயத
> தரளாபாங்கதொளெ நோடி கௌதியரொடனும்
> பரிகத ஹாஸ்யதொ ளிர்த்தெம்
> குருலஜ்ஜாபரதி னெறகி முகஸரஸிஜமம்'

என்றுமாற்றியமைக்கின் குற்றம் இலதாகும்; 'வடமொழியும் கன்னடமும் தொகைநிலைத் தொடராகா திருப்பது அழகு'.

இனி, 'கர்ணாடக ஸப்தமணிதர்ப்பணம்' என்னும் இலக்கண நூலும் இவ்வாறே கூறுகின்றது. அதனை நோக்குவோம்.

---

4. மதுரைக் காஞ்சி 202.
5. நெடுநல். 115.
6. அகம்.
7. குறுந்.
8. கவிராஜ. 1. 58.
9. ,, 1. 59.

10. வடசொற்களும் கன்னடச் சொற்களும் விரவித் தொகையாய் வருதல் கூடாது. முகதாமரெ, கண்கமலம் என்னுந் தொகை குற்றத்திற்கு உதாரணம்.

11. அவ்யயங்களும் த்யத் முதலிய ஸர்வநாமங்களும் ஸத்ருஞந்த பதங்களும் வட சொற்களோடு கூடியல்லாமல் தனியே வருதல் இல்லை.

12. கன்னடத்துக்கும் வடமொழிக்கும் தொகை (ஸமாஸம்) இல்லை. முன்னோர்கள் கூற்றில் வந்துள்ளவற்றை அறிக. விருதுகளில் சொல்லுக. மற்றவற்றில் வருதல் ஆகாது. அவ்வாறு வருவது **பகைத்தொகை** எனப்படும்.

இனி, தெலுங்கு மொழியை நோக்குவோம்: **ஆந்த்ரபாஷா பூஷணம்** என்னும் இலக்கண நூல் கூறுவது.

13. 'வடசொற்களோடு தெலுங்குச் சொற்களைச் சேர்த்துத் **தொகை** ஆக்கி வழங்குதல் கூடாது. 'தினகர கொடுகு', 'அமிமிஷ மொதவு' என்பனபோன்றவற்றைப் பெரியோர் பழிப்பர்.'

'பழைய நற்புலவர் தங்கள் தங்கள் செய்யுட்களிற் கூறியுள்ளவாறு, தெலுங்குச்சொல்லோடு வடசொல்லைச் சேர்த்து வழங்குதல் ஓவ்வோரிடத்தில் அமையும்.'

15. 'வாடிமயூகம்', விஞ்ஜாமர, மூடஸ்த்ரம், கறகண்ட்டுடு' என்பவை போல்வன ஆட்சிபெற்றவை.'

இதுகாறும் நோக்கியவற்ருல் கன்னடத்திலும், தெலுங்கிலும், பகைத்தொகையாய் வரும். இருமொழித்தொடர் செய்யுட்களில் வருதல் கூடாது என்று விலக்கியிருப்பதும், பண்டைப்புலவர் வழங்கியுள்ளன சில அம்முறைப்படி வருதல் மேற்கொண்டிருப்பதும் அறியலாகும். இவ்விதிக்கு மாருகக் கன்னடமொழியில் எவரும் வழங்கிற்றிலர். தெலுங்கில் சைவப்புலவர் சிலரொழிய மற்றையோர் எவரும் ஆட்சி செய்திலர்.

தமிழ்மொழியில், இருமொழிச் சொற்களாலாகிய தொகைநிலைத் தொடர் பண்டைச்செய்யுட்களில் வந்திருப்பன மேலே காட்டியவற்ருன் அறியப்படும். ஆயின் ஆண்டு வந்துள்ள தொகைச்சொற்கள் பெயரும் பெயரும் சேர்ந்து வந்தவை. அம்முறையின் மீறி, வடமொழியுபசருக்கத்தோடு (அவ்யயத்தோடு) தமிழ்ச்சொல்லைச் சேர்த்துத் திருவள்ளுவனுர் வழங்கியுள்ளார்.

16. 'மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை'

---

10. ஸப்தமணி. 80-உரை. 12. ஸப்தமணி 174.
11. ஸப்தமணி. 81.

என்னுஞ் செய்யுளைக் காண்க. இச்செய்யுளில், 'மதிநுட்பம்' என்பது வடசொல்லும் தமிழ்ச்சொல்லுஞ் சேர்ந்த தொகைச்சொல். இது முன்னையோ ராட்சியைக் கருதி மேற்கொள்ளுதற் குரியதாகும். ஆயின், 'அதிநுட்பம் என்பது இத்தகையதன்று. அதி என்பது வடமொழி யுபசருக்கம்; ஈண்டு அவ்வயம் எனப்படும். அதனோடு நுட்பம் என்னுந் தமிழ்ச் சொல்லைச் சேர்த்து வழங்கியுள்ளார். இது பண்டையோராட்சி யன்று; நாம் மேற்கொள்ளத் தக்கது மன்று. இவ்வாறே,

'ஒருவந்த மொல்லைக் கெடும்'

என்பதில் ஒருவந்தம் என்னுந் தொகையும் அமைவுடைய தன்றாகும். இனி,

'சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'

என்பதிலுள்ள சோகாப்பர் என்னுஞ் சொல் சிறிதும் அமைவுடைய தன்றாகும். ஸோகம் என்னும் வடசொல்லோடு யா என்னுந் தமிழ்ச் சொல்லின் திரிபாகிய ஆ என்பதைச் சேர்த்து, சோகா என்னும் பகுதியை அமைத்து, சோகாப்பர் என்று வழங்கியுள்ளார். இவ்வாறு இருமொழிச் சொற்களால் ஆகிய பகுதி பண்டைச் செய்யுட்களில் ஆட்சிபெற்றுள்ளதாகத் தெரியவில்லை. ஆட்சிபெற்றிருப்பினும் இத்தகையது தமிழ்மரபிற்கு ஒத்ததன்றாகலின் மேற்கொள்ளுதல் தகாது.

ஆசிரியர் தொல்காப்பியனார்,

'அந்நாற் சொல்லுந் தொடுக்குங்காலை'

× × ×

தொகுக்கும்வழித் தொகுத்தலும் விரிக்கும்வழி விரித்தலும்' என்றாராகலின், தொகுக்கும் வழியல்லாத விடத்துத் தொகுத்தல் கூடாதுஎன்பதும் அவர்கருத்தாதல்பெறப்படும். இனி, பாதுகாக்கஎன்னுந் தொடரும் மேற்கொள்ளத் தகாத தொன்றாகும். இதில், பாது என்பது காக்க என்னும் பொருளை யுடையதொரு வடமொழி வியங்கோள் வினைச்சொல். அதனோடு அப்பொருளேயுடைய காக்க என்னுந் தமிழ் வியங்கோள் வினையைச் சேர்த்து வழங்கியுள்ளனர். இத்தொடரில் பாது என்பது மிகையே. பின்னர், பாதுகா என்பதைப் பகுதியாகக்கொண்டு, பாதுகாத்தான் என்னுந் தொடக்கத்து வினைச் சொற்களையும் அமைத்து வழங்கலாயினர். பாதுகாத்தான் என்னுஞ் சொல்லில், பாது என்னும் வடசொல் மிகையும் பொருளமைதியில்லாதது மாயிருத்தல் அறிதற்பாலது. இதுபோன்றவற்றை மேற்கொள்ளாமல், தமிழ் மரபினைக் காப்பது தமிழறிஞர் கடனாகும்.

(தொடரும்.)

கவி பாரதிதாசற்கு நிதி

திருவாளர்களான: பெரியார். ஈ. வே. ரா, சர். R. K. சண்முகம் செட்டியார், டாக்டர், A. கிருட்டினசாமி, முன்னாளமைச்சர், S. முத்தையா முதலியார், C. N. அண்ணாத்துரை, பழைய கோட்டைப் பட்டகாரர் இளைய குமாரர், N. அர்ச்சுனன், அ. இராமசாமிக் கவுண்டர், S. L. பாரதி, S. R. சுப்பிரமணியம், N. சங்கரன், V. T. ஆதி இலக்குமி அம்மை, இந்திராணி பாலசுப்பிரமணியம், A. திருநாவுக்கரசு, N. கிருட்டினராசு ரெட்டியார், K. கருப்பண்ணன், M. செல்லப்ப ரெட்டியார், A. V. P. ஆசைத்தம்பி, S. வேதரத்தனம், முன்னாளமைச்சர். S. இராமநாதன், ஆகியோர் விடுக்கும் அறிக்கை :—

தமிழ்நாட்டின் ஒப்புயர்வற்ற புரட்சிக்கவிஞர் **பாரதிதாசன்** அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கும், தமிழர் சமூகத்திற்கும், பெரும் சேவை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பெருந்தொண்டிற்கு நன்றி செலுத்தும் பான்மையோடு ஓர் நிதி திரட்டி, கவிஞர் அவர்கட்குக் கூடிய விரைவில் அளிப்பதெனத் தீர்மானித்துள்ளோம். இந்தக் காரியத்தை நாம் நிறைவேற்றினோமானால் கவிஞரின் சேவைக்கு ஓரளவு நாம் நன்றியும் பாராட்டும் செய்தவர்களாவோம். ஆதலால், தமிழ் அன்பர்கள் அனைவரும் இந்த நிதிக்குத் தாராளமாக, நன்கொடைகள் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிதிக்குப் பணம் அனுப்பும் நண்பர்கள் **பாரதிதாசன் நிதிக்காக** என்று குறிப்பிட்டுக் கீழ்கண்ட முகவரிகளுக்கு அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

மானேஜர்,
எஸ். ஏ. ராமனுதன்
"விபரேட்டர்"
2/11, மவுண்ட் ரோடு, சென்னை.

N. கிருஷ்ணராஜ் ரெட்டியார்,
நாமக்கல்,
சேலம் ஜில்லா.

பேரறிஞர். A. சிதம்பரநாதச் செட்டியார் M. A., Ph. D. அவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரி **"இளங் கோவடிகள் தமிழ்க் கழக"** ஏழாம் ஆண்டு நிறைவு விழாவில் தலைமை தாங்கி ஆற்றிய சொற்பொழிவின் பிற்பகுதியை இப் பொழில் ஒன்பதாம் பக்கத்தில் வெளியிட்டுள்ளோம். பொழிலன்பர்கள் போற்றி உணர்வார்களாக!

தஞ்சைக் கரந்தைப் புலவர் கல்லூரி

இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்

ஏழாவது யாண்டு நிறைவு விழா.

(முற்றொடர்ச்சி: துணர் ௨௰, மலர் ௰௨, பக்கம் 224.)

இனி, சேக்கிழார் இறைவன் அடியெடுத்துக் கொடுக்கப் பாடினார் என்று சொல்வதை ஒப்பக்கூடிய சான்றுகள் காணப்படவில்லை. அவர் நூலாகிய பெரியபுராணத்தில், கொன்றுவிட்டார் என்று மங்கலமல்லாச் சொல்லைப் பெய்யமாட்டார். அப்பொருள்பட நயமாக உரைப்பர். ஏனாதிநாயனாரை அதிசூரன் கொன்றான்என்று கூறஅஞ்சி "முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்" என்று கூறிய நயத்தை நோக்குமின் என்பர். இத்தன்மையான நயத்தைச் சிலம்பில் முன்னரே காட்டினார் இளங்கோவடிகள். "கரையாமல் வாங்கிய கள்வனாமென்றே குரைகழல் மாக்கள் கொலை குறித்தனரே! கொலை குறித்தனரே." கோவலன் கொல்லப்பட்டான் எனக் கூறவேண்டியதை இவ்வாறு அமைத்தார். இக் கருத்தறிந்தே சேக்கிழார் அடியமைத்தார் என்றால் இழுக்குடைத்தாமோ? வில்லியும் இவ்வாறே பயின்று பாடினாரெனச் சான்று காட்டமுடியும். இத்தகைய கருத்துக்களைப் பிற்காலக் கவிகள் எடுத்தாளத் துணைநின்ற சிலப்பதிகாரத்தை இலக்கியம் என்பேன். தமிழ்க்கருத்துக்கள், பண்பாடுகள், நாகரிகங்கள் எவையுடைத்தாயிருக்கின்றனவோ அவை தமிழ் இலக்கியங்கள். சிலப்பதிகாரத்திலும் குறைகள் உண்டாக இலக்கியமெனக் கூறுதல் பொருந்துமோ என வினவின், பிற்கால காவியத்திற்போலப் பகுத்தறிவுக்கொவ்வாத செய்திகள் மலிந்துகிடக்கவில்லை. பகுத்தறிவுக் கொவ்வாத ஒன்று இருப்பினும் அது இலக்கியமாகாது என்றால் சிலப்பதிகாரமும் தள்ளப்பட வேண்டியதே. ஆனால் பகுத்தறிவு ஒன்றே துணையாகக் கொண்டு ஆராயின் நமக்கு உகந்த தமிழ் இலக்கியம் ஒன்றுமில்லை என்ற முடிவுக்குத்தான் வருவோம்.

ஆகவே செய்ய வேண்டியது என்? பகுத்தறிவுக் கொவ்வாத செய்திகள் இருப்பினும் ஐயத்தோடு படியுங்கள். பாமர மக்களிடைச் சொல்லாதீர்கள். அத்தகைய இலக்கியத்தைப்பற்றி மாணவர்களிடைக் குறைகளைக் காட்டிக் கண்டித்துச் சொல்லுங்கள்! பழைய செய்யுட்கள் போலவே பாக்கள் தொடுத்து மக்களிடைப் பரப்ப வேண்டும். புதுவதாக இலக்கியங்கள் கணக்கில் வெளிவரவேண்டும். இதுதான் மக்களைத் திருத்தும் தொண்டு. இன்று எழுந்த "எரித்தல் கொளுத்தல்" என்ற கிளர்ச்சியாளர்கள் உணர்ச்சியைப் பரப்பவே இவ்வாறு கூறுகின்றார்களன்றி நூல்களைக் கொளுத்திச் சாம்பலாக்

கும் நோக்கமுடையர் அல்லர்என்பதை நன்குஅறிவேன். இக்கிளர்ச்சி தமிழ்ப் புலவர்கள் பழைய முறையிலேயே புராணங்களை ஓதமாட்டார்கள் என்பதற்காகவும், படிப்பவர்கள் வீடுபெறும்நோக்கத்தோடு பயிலாது இலக்கியம் என்று படிப்பதற்கும், பொதுமக்கள் நூல்களை வைத்து வணங்கும் முறை ஒழிதற் பொருட்டும் எழுப்பப்பட்டதென எரிக்கும் கொள்கையுடைய தோழர்கள் கூறுகின்றனர். இவை முற்றிலும் உண்மையே.

பெரியபுராணம், கம்பராமாயணத்தை யான் இழக்க விரும்ப மாட்டேன். அவை உலகிற் சிறந்த இலக்கியங்களோடு ஒப்ப மிளிர்கின்றவையுமல்லாமல் இலக்கியச் செறிவுடைய ஆகலின், சிலப்பதிகாரத்தில் மணிமேகலை பிறந்த நாள் விழா கொண்டாடுங்கால், ஆயிரம் அந்தணர்க்குப் பொன்சொரிந்தான் கோவலன் என்று சொல்லப்படுவதால் அந்நூலைக் கொளுத்துவதா? எது இலக்கியம் என்பதை மனத்தால் உறுதிப் படுத்தமுடியும்? கோவலன் மாதவி வீட்டிற்குச் சென்றதால் வறியனுகவில்லை, பிராமணர்கட்குக் கொடுத்து வறியனுயினுன். ஆதலால் தமிழர்களே! நீங்களும் பிராமணர்கட்குக் கொடுத்து வறியவராகாதீர் என்பதைக் காட்ட எழுந்த நூல் சிலப்பதிகாரம் என்று கூறின் மக்களும் மனமாறுவர். ஆகவே ஆராய்ந்து படிப்பதாயின் கம்ப ராமாயணம் சேக்கிழார் புராணம் வேண்டும். ஆராயாது படிக்க விரும்பின் வேண்டாம் என்று கூறுவேன். நம் கருத்துக்கொவ்வாத இலக்கியங்களைத் தள்ளிவிட வேண்டும். இன்னும் நாட்டிலில்லாச் சாதி வகையை நாட்டும் பாட்டியலைப் பல்கலைக் கழகங்களிலே பாடமாக வைத்திருப்பது குறித்து மிகவும் வருந்துகின்றேன். தொல்காப்பியச் செய்யுளியல் போதாதா? பார்ப்பானுக் குரியது வெண்பா. அவனை வெண்பாயாப்பிலே பாடவேண்டுமெனக் கூறுகிறது. களவழி நாற்பது வெண்பாயாப்பால் அமைந்த நூல். அது சோழ அரசனைப்பற்றிப் பாடப்பெற்றது. இப்படியிருக்கவும் வெண்பா பார்ப்பார்க்கு உரியது என்னும் மோசடியை நம்ப முடியுமா?

"எது தமிழ் இலக்கியம்?" என்பதை நன்கு கற்று ஆய்ந்து தான் உறுதிப்படுத்த முடியும். இன்ன பண்பு, இன்ன அருமை உடையன இலக்கியங்கள் என்று காண நடுநிலையோடு படிக்கவேண்டும். நாம் எந்த இலக்கியத்தையும் இழக்க விரும்பக்கூடாது. ஒதுக்கிவிட்டுப் புத்திலக்கியங்கள் சமைக்கலாம். நம் "**பொழிலாசிரியர்**" **கோ. சி. பெரியசாமிப்புலவர்** எவ்வகைப் பாவையும் சிறந்த முறையில் விரைந்து பாடுவார். இவரை ஒரு சிறந்த காவியம் பாடித் தருமாறு உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். மேல் நாட்டார் செகப்பிரியர் காவியங்களை இழக்க விரும்புவார்களா? "ஒருகால், இந்தியப் பேரரசை இழக்க நேரினும் செகப்பிரியரை இழக்க விரும்பேன்" என்று கார்லைல் என்னும் பேரறிஞன் கூறினுன். அதுபோல் தமிழ் நாட்டை இழப்பினும் கம்பனை இழக்கமாட்டேன் என்று கூற யான் ஒப்பேன். ஆனுல், தமிழ்நாடும் வேண்டும் கம்பனும் வேண்டும், சேக்கிழாரும் வேண்டும் என்று சொல்லும் தமிழ் மக்கள் இருக்கவேண்டுமென்பேன். நீவிர் அத்தகைய தமிழ்மக்களாய் இலங்கி நாட்டிற்கு நலன் விளைப்பீராக!

காரைக்காலம்மையார்.

திருவாட்டி சு. கரும்படுசொல்லி அம்மையார், திருவையாறு.

(முற்றொடர்ச்சி: துணர் உ௰, மலர் ௰உ, பக்கம் 240.)

சின்னாள் கழித்துத் திரைகடலோடித் திரவியம் தேடுவேன் என்று சுற்றத்தார்கட்கு அறிவித்து மரக்கலம் அமைத்து வெளிநாடுகளுக்குச் சென்றான். பெரும்பொருள் ஈட்டினான். காரைக்காலுக்குத் திரும்பாமல் பாண்டிநாட்டில் ஓர் பட்டினத்தில் இருந்தான். வேறொரு பெண்ணை மணந்தான். முதல் மனைவியின் செய்தியை யார்க்கும் வெளியிடாமல் மறைத்து ஒழுகினான். ஒரு பெண் மகவைப் பெற்றான். தெய்வமாகத் தான் கருதிய மூத்த மனைவியின் பெயரையே அதற்கு இட்டான். இது நிற்க, பரமதத்தன் பாண்டிநாட்டில் புது மணம் புணர்ந்து வாழும் செய்தியை அம்மையின் சுற்றத்தார் அறிந்தனர். அம்மையை அழைத்துக்கொண்டு அங்குச் சென்றனர். அம்மையாரோடு தாம் வந்துள்ள செய்தியை அவனுக்கு ஆள்மூலம் அறிவித்தனர். கேட்ட வணிகன் அஞ்சினான். தன் புது மனைவியையும் பெண்மகவையும் உடனழைத்துக்கொண்டு அவரை எதிர்கொள்வேன் என வந்தான். அம்மையைக் கண்டு மனைவி மக்களோடு அவர் அடியில் வீழ்ந்தான். "யான் உமதருளால் வாழ்வேன், இவ்விளங் குழவிதானும், பான்மையால் உமது நாமம்" என்று வணங்கினான். கணவன் வணங்கக் கண்ட அம்மை அஞ்சி சுற்றத்தார்பால் ஒதுங்கி நின்றார். சுற்றத்தார், நாணி நின் மனைவியை வணங்குவது என் ? என்றனர். அவன் "மற்றவர் தம்மை நோக்கி.........செய்மின் என்றான்" (செய்யுள் 47) சுற்றத்தார் வியந்து நின்றனர். வணிகன் மாற்றங் கேட்ட அம்மையார் இறைவன் திருவடியை வணங்கி, சிந்தை ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வுகொண்டு உரை செய்கின்றார். "ஈங்கிவன்...........பரவி நின்றார்". அப்பொழுது இறைவன் அருளினாலே மேல் நெறி உணர்வு பெற்றார். தாம் வேண்டியவாறே அருளப் பெற்றார். உடம்பில் இருந்த ஊனுடை வனப்பை எல்லாம் உதறினார். எலும்புருவம் ஆனார். பேய் வடிவம் பெற்றார். மலர் மழை........... அகன்று போனார். (செய்யுள் 51) தாம் பெற்ற ஞானத்தின் பயனாய் எம்பெருமானை அற்புதத் திருவந்தாதியால் பாடினார். அவன் திருவடிகள் போற்றும் நற்கணத்தில் ஒன்றானேன் என்று மகிழ்ந்தார். பின் திருவிரட்டை மணிமாலை பாடினார். கயிலையை நோக்கி நடந்தார். கண்டவர்கள் வியப்புற்று அஞ்சி ஓடினார்கள். இறைவன் என்னை அறிந்தால் போதும், மற்றவர்களுக்கு நான் எவ்வடிவம் ஆனால் என்னவென்று நினைந்து வடதிசை நோக்கிச் சென்றார். கயிலையின் அருகடைந்தார். அங்கிருந்து காலால் நடப்பதைத் தவிர்ந்து தலையால் நடந்து மலையேறுங்கால் எம்பிராட்டியின் திருவருள்நோக்கம் அம்மையார் மேற்பட்டது. அம்பிகை வியந்து தம்பிரானை நோக்கி, "தலையினால் நடந்திங்கேறும் எம்பெருமான் ஓர் எற்பின் யாக்கை அன்பு என்னே" என்றாள். இறைவன் "வருமிவள் நம்மைப் பேணும்

அம்மைகாண் உமையே மற்று இப் பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்'' என்றான். பின் அருகு வந்தணைந்த அம்மையை நோக்கி 'அம்மையே' என்னும் செம்மை ஒரு மொழி உலகமெல்லாம் உய்யவே அருளிச்செய்தார். அங்கணன் அம்மையே என அருளிச்செய்ய அம்மையார் அப்பா என்று திருவடியில் புணிந்து வீழ்ந்து எழுந்தார். நம்பால் இங்கு வேண்டுவது என்? என்று வினவினர், அதற்கு அம்மை "இறவாத இன்ப அன்பு...........இருக்க என்றார். (செய்யுள் 60) இறைவன் அவ்வாறே கூடுமாறு அருள் கொடுத்துத் தென் திசையில் பழன மூதூரிலுள்ள ஆலங்காட்டில் நாம் ஆடும் நடனத்தைக் கண்டு நீ ஆனந்தம்பெற்று எப்போதும் நம்மைப் பாடுவாய் என்றருளினர். அம்மையும் வணங்கி விடைபெற்று மீண்டு திருவாலங்காட்டினைத் தலையால் நடந்தடைந்தார். ஆலங்காட்டில் அண்டமுற நிமிர்ந்தாடும் கோலங் காண்பொழுது "கொங்கை திரங்கி" என்ற மூத்த திருப்பதிகம் இசையொடு பாடினர். திரு நடம் கண்டு வணங்கும் பெருங்காதல் எழுந்தோங்க "எட்டியிலவம்" என்னும் திருப்பதிகம் பாடினர். அம்மையே என்று தாம் அழைக்கும் பேறு பெற்றாரை இறைவன் தான் செய்தருளும் தாண்டவத்தில், எடுத்தருளிய திருவடிக்கீழ் என்றும் இருக்கும்படி திருவருள் புரிந்தான். அப்பேறு பெற்றாரின் சிறப்பை முழுவதும் பரவும் அளவு யார்பால் அமைந்துள்ளது!

அம்மையார் இயல் இசைத் தமிழ்களில் வல்லவர் என்பது அவர் அருளிச்செய்த இரண்டு பிரபந்தங்களாலும், பதிகங்களாலும் தெளிவுறுகின்றது. "வெண்பாவிற் புகழேந்தி" என்பார் கூற்று அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி வெண்பாக்களைப் பயின்றிலாதார் கூற்றேயாம். அம்மையார் பாடல் ஞானப்பழத்தின் சுவையாய் அமைந்தனவன்றிச் சொன்னோக்குப் பொருள்நோக்குத் தொடைநோக்கு நடைநோக்குகளால் சிறந்த செந்தமிழ் இலக்கியங்களாகவும் அமைந்துள்ளன.

"பணியணிவார்........... மொழிபயின்றார்" (கா-பு-செய்யுள்-1) என்று சேக்கிழார் கூறியதற்கு ஆதாரமாக வுள்ளது, "பிறந்து மொழிபயின்ற" (அற்பு-1) திருப்பாட்டன்றோ?

கணவனொடு இல்லற நெறியில் இயைந்து வாழும்போதும் கடமை தவறாது ஒழுகினரேயன்றித் தாம் இறைவனொருவனுக்கு ஆளென்பதை உணர்ந்து அவன் பாலே தம் அன்பு முழுவதையும் வைத்து ஒழுகினர் என்பது "அவர்க்கே...........என்ஞான்று மாள்" (அற்பு-3) என்பதனால் அறியலாம்.

"இமைப் பொழுது மென்னெஞ்சில் நீங்காதான்" என்று வாதவூரடிகள் அருளியதற்கு விரிவுரைபோல "வானத்தான் என்பாரு மென்க" (அற்பு 9) என்ற திருப்பாட்டு அமைந்திருத்தல் காண்க.

இறைவனை உள்ளத்தே வைத்தவருக்கே இன்பம் என்பது "எனக்கினிய" (அற்பு-10) என்ற பாட்டால் அறியலாம்.

'நூலறிவுபேசி' என்ற திருப்பாட்டு (33) வீண் வாய்வாதம் பேசுவதினும் எக்கோலத்தாலேனும் இறைவனைக் குறித்துத் தவம் செய்தல் வேண்டுமென உணர்த்தும்.

அவையத்தார் இயல்பு.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் விரிவுரையாளர்
பண்டித வித்துவான்

திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

அவர்கள் திருச்சி வானொலியில் 28—2—45ல் பேசியது.

அவையத்தாருடைய இயல்புகள், பண்டைத்தமிழ் நூல்களிலும் சாசனங்களிலும் ஆங்காங்குப் பரந்து காணப்படுகின்றன. அவற்றைச் சுருக்கமாக இங்கே கூறுவேன். பண்டைக் காலத்தில் இருந்த அவைகளை அரசர் அவை, புலவர் அவை, என்னும் இரண்டு பெரும் பிரிவில் அடக்கலாம். அரசர்களுடைய அவையில் வழக்காராய்ந்து நீதி வழங்குதல் முதலிய அரசாட்சிக்கு உரிய எல்லாச் செயல்களும் நடைபெற்றன. இச் செயல்களை நடத்துதற்கு ஆங்காங்குச் சிற்றவைகள் நிறுவுதல் உண்டு, வழக்குகள் ஆராய்ந்து நீதி வழங்கும் அவைக்கு அறங்கூறு அவையம் என்று பெயரிட்டனர்.

முற்காலத்துத் தமிழரசர்கள், புலவர்களுடைய அவையிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். புலவர்களுடைய அவையில் பழைய நூல்களை ஆராய்தலும், உரை எழுதுதலும், புதிய நூல்களை இயற்றி அரங்கேற்றுதலும் முதலிய வேலைகள் நிகழ்ந்தன. இவ்வவையில் பல புலவர்கள் உறுப்பினர் ஆகவும், அவருள் ஒருவர் தலைவராகவும் வீற்றிருந்தனர். காய்சின வழுதி முதலிய பாண்டிய மன்னர்கள் முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்களை நிறுவி அச்சங்கங்களிற் புலவர் பெருமக்களைப் போற்றி அவர்கள் வாயிலாகப் பல அருந்தமிழ் நூல்களை வெளிப்படுத்தினர் எனவும், அவர்களுள் பதினைந்து பாண்டியர்கள் மூன்று சங்கங்களிலும் புலவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வீற்றிருந்தார்கள் எனவும் இறையனார் களவியல் உரையால் அறிகின்றோம். தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனாரால் செய்யப்பட்ட பாயிரத்தில் உள்ள

"நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து"

என்னும் பகுதியால் தொல்காப்பியம், பாண்டியன் மாகீர்த்தி அவையில், அகத்தியர் மாணக்கராகிய அதங்கோட்டாசிரியர் கேட்ட வினைக்கட்கெல்லாம் குற்றமற விடை கூறப்பட்டு அரங்கேற்றப் பெற்றது எனத் தெரிகின்றது. இக்காலத்திற் போல முற்காலத்து எவரும் தம் நோக்கத்திற்கேற்ப நூலியற்றி வெளியிடுதல் இயலாது. ஒருவர் இயற்றிய நூல் தக்க புலவர்களுடைய அவையில் குற்றந்தீர அரங்கேற்றப்பெற்ற பின்பே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழங்கப்படும். இது கருதியே எல்லா நூல்களுக்கும் முன்பே இருக்க

வேண்டிய சிறப்புப்பாயிரத்துக்குப் பதினொரு இலக்கணங்களை வகுத்த தொல்லாசிரியர் அவற்றுள் ஒன்றாகக் களன் என்பதையும் கொண்டனர். களன் என்பதற்கு அவைக்களம் என்பது பொருள் ஆகும். எனவே ஒரு நூலின் முன்னே அந்நூல் இன்னாருடைய அவைக்களத்தே அரங்கேற்றப் பட்டது எனக் கூறவேண்டும் என்பதாம், "அவையடைக்கியலே" என்று தொடங்கும் தொல்காப்பியச் சூத்திர விதிப்படி நூல்களின் முன் அவையடக்கங் கூறும் வழக்கமும் இக் கருத்தை வலியுறுத்துவதாகும்.

வெண்பாப்பாட்டியல் முதலிய நூல்களில் நல்லவை, நிறையவை, தீயவை என்னும் மூவகை அவைகளின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் நல்லவையில் உள்ளோர் இலக்கணம் தருமநெறி நிற்றலும், பொய், காமம், சினம், செற்றம் என்னும் இவை இல்லாமையும் கலைகளெல்லாம் உணர்தலும் ஆகும். நிறையவையிலுள்ளோர் இலக்கணம் நலம், அடக்கம், செம்மை, நடுவுநிலை, ஞானம் நற்குலம் என்னும் இவையுடைமையும் ஒருவர் தாம் கற்றவற்றைப் பிறர் மனங்கொள்ளக் கூறமாட்டாராயினும், அம்மாட்டாமையை மறைத்துப் பொருளைச் சொல்லிக் காட்டித் தப்பு இன்றாக எல்லோர் மனமுங் கொள்ளும்படிச் செய்தலும் ஆகும். நிறையவையின் இயல்பு ஒன்றை மலைபடுகடாத்தில் உள்ள

"நல்லோர் குழீஇய நாநவி லவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லதி னியக்குமவன் சுற்றத் தொழுக்கமும்"

என்னும் பகுதியாலும் அறியலாம். மேற் கூறப்பட்ட இயல்புகளையுடைய நல்லவையிலும் நிறையவையிலும் பாடல்களை அரங்கேற்றலாம். தீய அவையில் அரங்கேற்றல் ஆகாது. அரங்கேற்றும் புலவரோடு ஒத்த புலவர் உள்ள அவை நல்லவை என்றும் மேற்பட்ட புலவர் உள்ள அவை நிறையவை என்றும் தெரிகின்றது. இவ் விலக்கணங்களுக்கு மாறான இயல்புடையவர் உள்ள அவை தீயஅவையாம். யாப்பருங்கலவிருத்தியுரையிலும் நல்லவை, தீயவை, குறையவை, நிறையவை, என்னும் நால்வகை அவையத்தார் இயல்புகள் கூறப்பட்டுள்ளன.

முற்காலத்து அரசர்களுடைய அவையில் வில்வித்தை, யாழ்வித்தை முதலியனவும் அறங்கேற்றப்படுதல் உண்டு என்பதும், இருவர் வாதஞ் செய்ய எண்ணினால் அரசர் அவையில் தகுதியிற் சிறந்தவர்களை நடுநிலைத்தானத்தில் அமைத்து வாதஞ் செய்து வெற்றி தோல்வி அறிதல் உண்டு என்பதும் பெருங்கதையிற் காணப்படுகின்றன. அவையில் வாதஞ் செய்தல் உண்டென்பதை 'மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்' என்னும் நன்னூற் சூத்திரப் பகுதியாலும் உணரலாம்.

இனி அரசர்களுடையஅவையில் ஓலக்க அவை, மந்திராலோசனை அவை என இரண்டுவகை காண்கின்றோம். ஓலக்க அவையில் மற்றை அரசர்களும், அமைச்சர் முதலியோரும் இருப்பார்கள். இயற்றமிழ்,

இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழும் முழங்கும். முத்தமிழ்ப் புலவர்கட்கும் பரிசுகள் வழங்கப்படும். மற்றும் பொதுவான பல செயல்கள் நடைபெறும்.

மந்திராலோசனை செய்யும் அவையைப்பற்றிய குறிப்புக்கள் சீவகசிந்தாமணி கம்ப ராமாயணம், பாரதம் முதலிய நூல்களில் கட்டியங்காரன், தசரதன், இராவணன், துரியோதனன் முதலியோருடைய அவைகளைக் கூறும் இடங்களிற் காணப்படுகின்றன. அவ்வவையில் இருப்பவர்களுட் பலர் கூற்றுக்கள் தம் அரசர்களுடைய கருத்து நல்லதாயினும் தீயதாயினும் அதற்குச் சார்பாக உள்ளன. அரசன் தீயவனாயின் அவனை மறுத்து இடித்துக் கூறும் அவையத்தார் சிலர் இருந்தமையும் அந்நூல்களின் வாயிலாக அறிகின்றோம். எடுத்துக் காட்டாகத் தசரதனுடைய அவையத்தார் இயல்பையும், இராவணனுடைய அவையத்தார் இயல்பையும் பார்ப்போம். தசரதனுடைய அவையத்தார் இயல்புகள் அயோத்தியா காண்டத்து மந்திரப்படலத்திற் பல பாடல்களிற் காணப்படுகின்றன. அப்பாடல்கள் பல திருக்குறட் கருத்துக்களை அடக்கி உள்ளன. அவற்றுள் இரண்டு பாடல்களைக் கூறுவேன்.

"உற்றது கொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்
மற்றது வினையின் வந்தது ஆயினும் மாற்றல் ஆற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய நூலும்
கற்றவர் மானம் நோக்கிற் கவரிமா அனைய நீரார்.
தம்முயிர்க்கு உறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின்று உரைக்கும் வீரர்
செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் காலம்
மும்மையும் உணர வல்லார் ஒருமையே மொழியும் நீரார்"
என்பனவாம்.

இராவணனுடைய மந்திராலோசனை அவையைப்பற்றிய பல குறிப்புக்கள் யுத்த காண்டத்து மந்திரப் படலத்திலும், ஒற்றுக் கேள்விப் படலத்திலும் உள்ளன. அறிவும், அனுபவமும், முதுமையும், குணமும் உடைய மந்திரிகளும் மக்கள் தம்பியர் போன்ற நெருங்கிய உறவினரும், ஊமர் முதலியோரும் அல்லாதவரை இராவணன் அவைக்கு வெளியிற் போகச் செய்தான் என அங்கே கூறப்பட்டுள்ளது. இளையரையும் மகளிரையும் போகச் செய்தான் என்பதைக் கம்பர் இரண்டு படலத்தும் கூறியுள்ளார். அது, அவர்கட்கு மறைப் பொருளை அடக்கிவைத்துக் கொள்ளும் ஆற்றல் இல்லாமையைப் புலப்படுத்துவதாகும். மந்திராலோசனை செய்யுங்கால் இருக்கத் தகாதவர்கள் இவரென்பதைப் பாரதத்தில் உள்ள

துன்று பிணியோர் துறந்தோர் அடங்காதோர்
கன்று சினமனத்தோர் கல்லாதவர் இளையோர்
ஒன்று முறைமை யுணராதவர் மகளிர்
என் [illegible]வர் மந்திரத்தின் எய்தப் பெறுதாரே,

என்னும் [illegible] நன்கு அறியலாம்.

அமைச்சர். புரோகிதர், படைத்தலைவர், தூதர், ஒற்றர் ஆகியவர்களை அரசனுக்கு உரிய ஐம்பெருங்குழு எனவும் கரணத்தியலவர் முதலிய எண்மரை அரசனுக்கு உரிய எண்பேராயம் எனவும் திவாகரம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

இனி அறங்கூறு அவையத்தார் இயல்புகளை நோக்குவோம். அவரியல்புகள் தொல்காப்பியத்திலும், புறப்பொருள் வெண்பாமாலையிலும் வாகைத்திணை வகையிற் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் "எட்டுவகை நுதலிய அவையத்தானும்" எனவும், புறப்பொருள் வெண்பாமாலையில் அவையமுல்லை என்னுந்துறை உதாரணத்தில் "எட்டின் வழிபடர்தல் வல்லது அவை" எனவும் கூறப்பட்டிருத்தலால் அவையத்தாருக்கு எட்டு இயல்பு இன்றியமையாது இருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. அவை குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, பொறாமையின்மை, அவாவின்மை என்பனவாம். இவற்றைத் தொல்காப்பியவுரையிற் காட்டப்பட்டுள்ள

"குடிப்பிறப்பு உடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கமும் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையிற்
காதல் இன்பத்துத் தங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவாஅ வின்மையென
இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்
தோலா நாவின் மேலோர், பேரவை,

என்னும் ஆசிரியமாலைப் பாடற் பகுதியாலும், புறப்பொருள் வெண்பாமாலையுரையிற் காட்டப்பட்டுள்ள "குடிப்பிறப்புக் கல்வி குணம் வாய்மைதூய்மை, நடுச்சொல்லுநல்லணியாக்கங்-கொடுக்கும், அழுக்காறு அவாவின்மை அவ்விரண்டோடு எட்டும், இழுக்கா அவையின் கண் எட்டு," என்னும் பழைய வெண்பாவாலும் அறியலாம். இவற்றுள் தொல்காப்பிய உரையில் ஒழுக்கம் எனக் காணப்படும் இடத்திற் புறப்பொருள் வெண்பாமாலை உரையிற் குணம் எனக் காணப்படுகின்றது. 'ஒழுக்கமும் உடைமையும் ஒரு குணமேயாம்' இந்த அறங்கூறு அவையத்தைப்பற்றி மதுரைக்காஞ்சியில்

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகிச்
சிறந்த கொள்கை அறங்கூறு அவையம்"

எனப் பொருள் நயம் சிறப்பக் கூறப்பட்டுள்ளது. இவ்வடிகளின் கருத்து அவையில் இருப்பவர்கள் வழக்கிட்டவர்களுக்கு உண்டாகும் அச்சத்தையும் வருத்தத்தையும், பற்றுள்ளத்தையும் நீக்கி ஒரு பக்கத்திற் கோபமும், மற்றொரு பக்கத்தில் மகிழ்ச்சியும் செய்யாமல் தம் மனத்தைக் காத்து நடுவு நிலைமையும், விரதங்களும் உடையராய் இருத்தல் வேண்டும் என்பதாம். இவற்றுள் [illegible]-நடுவுநிலைமை தவறாமல் வழக்கிற்கு முடிவு கூறுவார்களோ [illegible]டார்களோ

என்னும் ஐயத்தால் வழக்கிடுவாரிடத்து உண்டாவது. அவலம் என்பது வருத்தம், அது வழக்கில் தோற்றவர்களுக்கு அத்தோல்வியால் உண்டாவது. ஆர்வம் - அவர்களுடைய மனம் கருதிய பொருள்கள் மேல் தோன்றிய பற்றுள்ளம். அஃதாவது - வழக்கில் தம் கொள்கையே நியாயமானது என்று நினைக்கும் முடிவான உள்ளம். வழக்கிடுவாரிடத்து அச்சம், அவலம், ஆர்வம் என்னும் இம்மூன்றும் இருத்தல் இயற்கையே, வழக்கிற்கு முடிவு கூறும்பொழுது வழக்கிட்டவருடைய மனம் கொள்ளுமாறு நன்ருக விளக்கி முடிவைக் கூறுதலின் வாயிலாக இம்மூன்றையும் போக்கவேண்டும். இவ்வாறு செய்வதற்கு அவையத்தாரிடம் அமைய வேண்டிய ஆற்றல் நடுவுநிலைபிறழாமை என்பது தோன்ற 'ஞெமன்கோ லன்ன செம்மைத்தாகி' என மூன்றும் அடியிற் கூறப்பட்டது. சில நீதிபதிகள் வழக்கின் உண்மை, தம்மனத்தில் தெரிந்தவுடன் பொய் வழக்கிடுவார் பால் கோபக்குறி காட்டுதலும், மெய் வழக்கிடுவார் பால் மகிழ்ச்சிக்குறி காட்டுதலும் உண்டு. அவ்வாறு செய்யாமல் மனம் காக்கப் படவேண்டும். அதற்கு ஏற்ப மனம் விரதங்களாற் பண் பட்டிருக்க வேண்டும் என்பது தோன்ற 'கொள்கை' என நான்காம் அடியிற் கூறப்பட்டது. கொள்கை என்பதற்கு விரதம் என்று பொருளாகும். இங்ஙனம் முதல் அடிப் பொருளுக்கு மூன்றும் அடிப் பொருளும் இரண்டாம் அடிப்பொருளுக்கு நான்காம் அடிப்பொருளும் காராணமாய் நிரல் நிரையாய் அமைந்து விளங்கும் அழகு இன்பந்தருவதாகும். இவ் வறங்கூறு அவையம் பண்டைக் காலத்தில் இருத்தமையை

> "அரைசுகோல் கோடினும் அறங்கூறு அவையத்து
> உரை நூல் கோடி ஒருதிறம் பற்றினும்"

என்னும் சிலப்பதிகாரப்பகுதியும், அறங்கூறு அவையம் தருமாசனத்தார் வழக்குரைக்குமிடம், என்னும் அடியார்க்கு நல்லார் உரைப் பகுதியும் வலியுறுத்துவனவாம்.

இத்தகைய அறங்கூறு அவையங்கள் முற்காலத்துப் பல இடங்களில் இருந்தமைக்குப் பெரியபுராணமும் சான்று பகர்கின்றது. சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனுரோடு திருவெண்ணெய் நல்லூரில் இருந்த அவையில் வழக்குத் தொடர்ந்து அடிமை ஓலைகாட்டிச் சுந்தரமூர்த்தியை அடிமை கொண்டார் என்னும் வரலாற்றுலும், திருநீலகண்ட நாயனர் தம்மிடம் சிவபெருமான் கொடுத்த ஓட்டைக் கொடாமலும், அவ்வோடு காணுமற் போனமையை மெய்ப்பிக்கத் தம் மனைவி கையைப் பிடித்துக் குளத்தில் மூழ்கிச் சூள் செய்யாமலும் இருந்தபொழுது சிவபெருமான் தில்லைவாழ் அந்தணர்கள் வீற்றிருந்த அவைக்குச் சென்று வழக்குத் தொடர்ந்து வெற்றிபெற்ருர் என்ற வரலாற்றுலும் திருவெண்ணெய்நல்லூரிலும் தில்லையிலும் அறங்கூறு அவையங்கள் இருந்தன என அறிகின்ருேம். அவ்வவையில் இருந்து வழக்காராய்ந்த பெரியோர்களைப்பற்றிச் சேக்கிழார் தடுத்தாட் கொண்ட புராணத்திற்கூறிய "பண்பின் மிக்க மேன்மையோர்" "அனைத்து நூல் உணர்ந்திர்" "மாசிலா மறையோர்" "புனித நான்மறையோர்," "செவ்விய மறையோர்" "திருமிகு மறையோர்"

என்னுந் தொடர்களை ஆழ்ந்து நோக்குவார்க்கு அப்பெரியோர்கள் பால் மேற் கூறப்பட்ட குடிப்பிறப்பு முதலிய எட்டு இயல்புகளும் இருந்தன என்பது புலனாகும். அரசனே வழக்காராய்ந்து முடிவு கூறுதலும் உண்டு என்பதைச் சோழன் கரிகாற் பெருவளத்தானுடைய வரலாற்றால் அறியலாம்.

இனி ஊர்தோறும் நிறுவப்படும் கிராம. சபைகளில் இருந்தவர்களின் இயல்புகளைப்பற்றிச் சாசனங்களிற் காணப்படுங் குறிப்புக்களைப் பார்ப்போம். இவ்வவையத்தார் சம்வத்சரவாரியம், தோட்டவாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், பஞ்சவாரியம், என்னும் ஐந்து உட்கழகங்களைத் தம்மகத்துக் கொண்டு கிராம ஆட்சி முழுமையும் நடத்தினர். இவ்வவையின் உறுப்பினர்கள் ஆண்டுதோறும் ஆங்காங்குப் பொது மக்களாற் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுக்கப் பெறுவர்.

"கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்,
பொறிகண் டழிக்கும் ஆவண மாக்களின்" என்னும் அகநானூற்றுப் பகுதி இவ்வழக்கத்தைக் குறிப்பதேயாகும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பெருமக்கள் எனவும், திருவடியார் எனவுங் கூறப்படுவர். இவ்வவையாருக்கு ஆளுங் கணத்தார் என்னும் பொதுப் பெயர் உண்டு. இவ்வவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையுடையோர் — காணிக்கடன் செலுத்தற்கு ஏற்ற கால்வேலி நிலமும், சொந்த மனையும் உடையவராகவும், சிறந்த நூல்களைக் கற்ற அறிஞராகவும் செயல்களை நிறைவேற்றும் வன்மை உடையவராகவும், அறநெறியில் ஈட்டிய பொருளைக் கொண்டு தூய வாழ்க்கை நடத்துவோராகவும், முப்பத்தைந்துக்கு மேல் எழுபத்தைந்துக்கு உட்பட்ட ஆண்டு உடையவராகவும் மூன்று ஆண்டுக்கு உட்பட்டு எந்த நிறைவேற்றுக் கழகத்திலும் உறுப்பினராக இராதவராகவும் இருத்தல் வேண்டும்.

கீழ்க்காணும் இயல்புடையவர்கள் தம் வாழ்நாள் முழுதும், அவ்வவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தற்குத் தகுதி அற்றவராவர் — எந்தச் சபையிலாவது உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதிருந்தவர், ஐவகைப் பெரும் பாதகம் செய்தோர், கிராமக் குற்றப்பதிவுப் புத்தகத்திற் பதிவு செய்யப்பட்டவர், பிறர்பொருளைக் கவர்ந்தோர், கள்ளக் கையெழுத்திட்டோர், குற்றங் காரணமாகக் கழுதை மேல் ஏற்றப் பட்டோர், கையூட்டுக் கொண்டோர், கிராமத் துரோகி என்று கருதப்பட்டோர், மேற்குறிக்கப் பெற்றவர்களின் உறவினர்.

இவ்வவையின் உறுப்பினர்கட்கு எவ்வகை ஊதியமுங் கிடையாது. வழக்கின் தீர்ப்பை எழுதும் மத்தியஸ்தனுக்கும், கணக்கெழுதும் கரணத்தானுக்கும் ஊதியம் உண்டு. அவையின் செலவிற்குச் சபாவிநியோகம் என்னும் வரி வாங்கப் பெற்றது. அவை இரவிலும் நடைபெறுவது உண்டு. உறுப்பினரை முரசறைந்தும், இரட்டைக் கொம்பு ஊதியும் அவைக்கு வருமாறு அறிவிப்பது வழக்கம்.

நியாய விசாரணை செய்யும் வேலை முற்கூறப்பட்ட உட்கழகம் ஐந்தனுள் சம்வத்சரவாரியத்தைச் சேர்ந்தது. நியாய விசாரணை செய்வோர் கொலை செய்தவனுக்குக் கொலைத் தண்டம் விதித்தலும், பிற குற்றஞ் செய்தவர்களுக்குச் சிறையிடுதலும், விலங்கிடுதலும் பொன் தண்டம் விதித்தலும் உண்டு. அறியமையால் நேர்ந்த சாவிற் கெல்லாம் கொலைத் தண்டம் விதிக்கமாட்டார்கள். பொன் தண்டம் விதிக்கப்பட்டவர் அதனைக் கொடாது ஓடிவிட்டால் அவரது வீடு காணி முதலியவற்றை அரசனது ஆணையின்படிவிற்று ஊர்ச்சபையார் ஒழுங்கு செய்வர்.

இத்துணையுங் கூறியவாற்றல் முற்காலத்து இருந்த பலவகை அவையத்தார் இயல்புகளை ஒருவாறு அறியலாம்.

சோழநாட்டுச் சிறப்பு

வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.

மணிகொண்ட திரையாழியை மருங்கு உடுத்த நிலமகளுக்கு மதி முகம் போன்றது இந்த நாடு. அதன்கண் திருநுதல் போன்றது தென்றமிழ் நாடு. அதன்கண் அணிந்த திலகம் போன்றது சோழ நாடு. சோழ நாட்டின் சிறப்பினைத் தோலாநாவின் மேலோர் பலர் தத்தம் நூல்களினும் தனிப்பாக்களினும் உளங்குளிரப் பாடியுள்ளனர். அன்னோர் புகழ்ந்த இந் நாட்டின் சிறப்பை யாமும் புகல முயலுதல் மாநாகம் வளைத்த மேருமலையைப் பூநாகமும் வளைக்க முயல்வதையொக்கும். எனினும் ஒரு சிறிது முயல்வோம்.

நிலவளமும் குடிவளமும்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் நாட்டின் இலக்கணமாகக் கூறிய இயல்புகளனைத்தும் பொருந்தியது சோழ நாடு. இந்நாட்டின் கண் மக்கள் உயிர் வாழ்தற்கு வேண்டிய எல்லா உணவுகளும் பெரு முயற்சியில்லாமலே எளிதில் விளையத்தக்க விளை நிலங்களும் உள்ளன. விளைவிக்கும் உழவர்களும்உளர். வறுமைஎன்பதைக் கனவிலும் இந்நாட்டினர் அறியார். துறவோரும், அந்தணரும், புலவர் பெருமக்களும், கலத்தினும் காலினும் பெரும் பொருளீட்டும் வணிகரும், பல்வகைத் தொழிலிலும் வல்லவர்களும் தத்தம் முயற்சிக்கு இடையூறின்றி வாழ்கின்றனர். பசியும் பிணியும் இங்கு அணுகா. வசியும் வளனும் குறையா. நாடாவளமுடையது இந்நாடு.

காவிரியாற்றின் சிறப்பு.

காவிரியாறு கோள் நிலை திரிந்து கோடை நீடி வான்பொய்த்த காலத்தும் தான் பொய்யாதது. சையமால் வரையிலிருந்து தண் புனல் பெருகி வருதலால் வையமா மகளின் மார்பிற்கிடந்த மணி யாரம்போல் விளங்குகிறது.

பல்லுயிர்களையும் பரிந்தூட்டிக் காத்தலால் தாயெனப் புகழும் தகுதி வாய்ந்தது. தன் புனித நீரால் புணரியையும் புனிதமாக்குவது. இவ்வாற்றின் இரு கரையிலுமுள்ள அத்தனை சிவாலயங்கள் வேறு எவ்வாற்றின் கரையில் உள்ளன? செல்லும் வழியிலுள்ள சிவதலங்கள்தோறும் பூவும், நீரும், பொன்னும் இறைத்து இறைவனை வழிபட்டு ஒழுகலால் எண்ணரும் பெருமையுடைய ஈசனடியார்களைப் போல் இலங்குகின்றது. 'தாயைப்போலச் சேயர்' என்பதற்கிணங்க காவிரியன்னையின் அமுதுண்டு வாழும் மக்களும் சிவபத்திச் செல்வர்களாய்த் திகழுகின்றனர்.

சென்றடையாத திருவுடையானுகிய குன்றுடையான் வாழும் சிராப்பள்ளியும்; கானவர் மடமகள் வள்ளி நாயகியின் தெள்ளிய சுவைத் தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றும், பிரமசாரியென்றும், ஞான பண்டிதனென்றும், புகழப்பெறும் முருகப்பெருமான் கல்லால நீழலில் நால்வர்க்கு மெய்ப்பொருளைச் சொல்லாமற் சொல்லிய தந்தையாருக்கு ஒரு மொழிப்பொருளைக் குருவாகியுபதேசித்துச் சாமிநாதன் எனப் பெற்ற சாமிமலையும், இந் நாட்டில் குறிப்பிடத்தக்க குறிஞ்சி நிலங்களாம். முல்லை நிலம் மிகுதியாக இல்லையெனலாம். பாலை நிலம் இல்லவே இல்லை. மருதமும் நெய்தலுமே மலிந்தது சோழ நாடு.

மருதவளம்.

இந்நாட்டின் எல்லாப் பாகத்திலும் காவிரியாறு கால்பரந்து பாய்கின்ற தோற்றம் பெரியமரத்தின், அரை, கவை, கொம்பு, வளார், இலை, தளிர் முதலியவற்றின் தோற்றம் போன்றது. உடம்பின் நடு நாடியிலிருந்து நரம்புகள் கிளைத்துப்போய் உடல் முழுதும் பரவியுள்ளனவும் போலும். வயல் நிலங்களில் நீர் பாயும் ஓசையும், உழவர் தொழின் முழக்கும், உழத்தியர் நாற்றை நடும் ஓசையும், களை கட்டும் ஓசையும், குரவைப் பாட்டோசையும், கரும்பாலையோசையும், புள்ளினங்களினேசையும் பெருகிக் கடலோசை போன்றொலிக்கும். நெற்பயிர் வளர்ந்து நிற்கும் காட்சி காவிரியின் குளிர்ந்த நீரால் உடல் குளிர்ந்து நிலமகள் மயிர்ப்புளகம் கொண்டதுபோல் தோன்றும். பசும் பயிர்களினிடையே செந்தாமரையும் வெண்டாமரையும் பூத்து விளங்கத் தாமரைப் பாசடைகளினிடையே பெரியவெண் சங்கம் தவழ்ந்து செல்லுதல் நீலவானிடையே உடுக்குலங்கள் விளங்க மேகத்தினிடையே முழுமதியம் தவழ்ந்து செல்வது போல் தோன்றும். தெய்வமலரென்று புகழப்பெறும் தாமரை மலர்களையும் களைகளைபவர் பிடுங்கியெறிவர்.

களைகளெல்லாம் கட்டபின்னர் நெற்பயிர் பசும் பாம்பு போல் சூல் கொண்டு, கதிரீன்று புன்மாக்கள் செல்வம் பெற்றதுபோல் பணிவின்றித் தலை உயர்த்தி இருந்து பின் நுணங்கிய நூற்கேள்வியுடையார்போற் பணிந்து நிற்கும் பத்தியுடைய திருத்தொண்டர் ஒருவரை ஒருவர் கண்டபோது வீழ்ந்து வணங்குவது போலவும் இருக்கும் அத்தோற்றம்.

ஒருங்கு தோன்றி, ஒருங்கு வளர்ந்து, ஒருங்கு அறுபடும் நெற்பயிர்கள் புவனங்கள் எல்லாம் இறைவனல் ஒருங்கு படைக்கப்பட்டு

இருந்து ஒரு காலத்து இறைவனால் அழிக்கப்பெறும் என்ற உண்மையை உணர்த்தி, இவ்வுலகில் ஒன்று தோன்றி ஒன்று அழியக் காண்கின்றோமேயன்றி எல்லாம் ஒருங்கே அழியாமையால் இவ்வுலகம் என்றும் ஒரே இயல்பாயுள்ளது, செயப்படு பொருளன்று, அதனால் இதனை ஆக்கும் கருத்தா ஒருவன் இலன், என்று கூறுவாரின் கூற்றை மறுக்கச் சிறந்த ஏதுவாக நிற்கும்.

அறுத்த நெற்கதிர்களை மலைபோல் போர் ஆக்குவர். பின்பு அதனை அதரி திரிப்பதற்காக உழவர்கள் அப்போரின்மேல் ஏறி நின்று நாட்காலையில் ஆட்களை நாவலோ என்று அழைக்கும் ஒலி மன்னன் போர்க்களத்திலே யானைமீது ஏறி நின்று பகைவர் உயிரைக் கொண்டுபோகக்கூற்றுவனை அழைக்கும் ஒலிபோலிருக்கும். உதிர்த்த நெல்லைக் குன்று போன்றுயர்ந்த கூடுகளில் நிரப்பிவைப்பதால் புனல் நாடு என்று பெயர் பெற்ற இந்நாடு மலைநாடு போலத்தோன்றும். மன்னருக்குச் சேரவேண்டிய ஆறிலொரு கடமையை மகிழ்ந்து செலுத்தி எஞ்சிய நெல்லை வயலில் வேலைசெய்த ஆட்களுக்கும் இரவலர்க்கும், வெறுக்குந் தனையுங் கொடுத்து மிகுந்ததை மனைக்கண் உய்த்து விருந்தோம்பி உழவர்கள் வாழ்வார்கள். காவிரியின் நீர் வளத்தாலும் அந்நாட்டின் பிடியெருவும் வேண்டாத நிலவளத்தாலும் விளையும் விளைவின் மிகுதியை எடுத்துரைப்பது எவ்வாறு? "வேலியாயிரம் விளையுட்டாக காவிரிபுரக்கும் நாடு" என்று ஆன்றோர் கூறியது கற்பனையன்று வாய்மையே. "சோழவள நாடு சோறுடைத்து" என்றதும் பொய்யாமொழியே.

நெல்லினருகே கரும்பும் அதனருகே கமுகும், அதனருகே தென்னையும் அதனருகே மா பலா முதலிய கனிதரு மரங்களும் வரிசை வரிசையாக நிற்கின்றகாட்சி பசியெனும்பகைவன் உள் நுழையாதபடி படைகளை அணி வகுத்து நிறுத்தி வைத்ததுபோல் விளங்கும்.

தடாகங்களிலே எருமை புகுந்து குவளைப் பூக்களைக் குதட்டும். அதன் மடியிலே வரால் முட்டும். அதனைக் கன்றென்று கருதி மடி மடை திறந்து எருமை பால் சொரியும். அதனால் தடாகம் நிறைந்து அலைபுரட்டும். நீரோடு கலந்த அப்பாலை வெண்டாமரைத் தவிசில் வீற்றிருக்கும் அன்னம் நீரினின்று பிரித்துண்ணும், அத் தோற்றம் நூற்பெருங்கடலுள் நுண்பொருள் தெரிந்து நாற்பயன் கொள்ளும் நாமகள் போன்றிருக்கும்.

பொய்கைகளிலும் பூஞ்சோலைகளிலும் புகுந்து நறுமணமும், பூந்தேனும் குளிர்ச்சியும் சுமந்து மெல்லிய நடையொடு திரியும் தென்றற் காற்று அடிவருடச் செழுங்கரும்பு கண்வளரும் தோற்றம் கண்டார்க்குவகை பயக்கும். சோலையில் மந்தி பொன்னிறமாகப் பழுத்த பலாப்பழத்தைக் கவர்ந்து சென்று மரக்கவட்டிலிருந்து சுளைகளைப் பிடுங்கித் தின்னும் தோற்றம் நரசிங்கம் கம்பத்தினிடையே தோன்றி இரணியனைப் பிடித்து அவன் வயிற்றைக் கிழித்து குடரைப்பிடுங்கித் தின்பதுபோல் தோன்றும். இன்னும் அம்மருத நிலத்தின் வளமும் காட்சியும் சொல்லுக்கு அடங்குவதன்றாகலின் இம்மட்டோடு நிறுத்துவோம்.

நெய்தல் நிலம்.

காவிரியாறு கடலொடு கலக்கும் சங்கமுகத் துறையில் உள்ள காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்பையறியாதார் யார்? அதுபோல் வாணிபத்தால் பெருளீட்டிக் குபேரனென வாழ்கின்ற வணிகர்கள் மல்கிய பட்டினங்கள் பல சோழநாட்டின்கண் உள்ளன. திருமறைக் காடு, நாகப்பட்டினம், காரைக்கால் முதலிய பலபதிகள் நெய்தல் வளம் மிகுந்தவை. கடற்கரைகளில் பிற நாடுகளுக்குச் சரக்கேற்றிப் புறப்படுங் கப்பல்களும், பிற நாட்டிலிருந்து வாணிபம் செய்து பொன்னெடு மீண்டு நிற்கும் கப்பல்களும் நிறைந்து நிற்கும். பெரிய மரக்கலங்கள் தேர்போல் விளங்கப் படகுகள் யானைபோலசைந்து நிற்க, அலைகள் குதிரைகள் போல் தாவியோட, சுறுமீன்கள் வாளோடு போர்செய்யும் வீரர்போல் துள்ள, பரவைகள் பல்லியம் போல் ஒலிக்க, கட்டற்கரை ஒரு போர்க்களம் போல் காட்சியளிக்கும்.

சங்குகளும் சிப்பிகளும் ஈன்ற முத்துக்களும் புன்னை அரும்பு களும் வேற்றுமை உணர இயலாதபடி கடற்கரைகளில் கலந்து கிடக் கும். கடலோரங்களில் முடத்தாழைகள் மடல் விரிந்து சோறு கான்று நிற்கும் காட்சி கடற்புலவு நாற்றம் பொருமல் கான்று நிற்பதுபோலத் தோன்றும். கழிக்கரைகளில் நீண்ட கால்களோடு அலகையும் நிலத்தில் ஊன்றி ஓடுமீனேடி உறுமீன் வருமளவும் அசையாது நிற்கும் நாரைகள் போலிவேடம் பூண்டு ஒழுகித் தக்க சமயம் பார்த்துத் தியநெறியில் கூடியொழுகும் போலித் துறவிகளின் நிலை காட்டும். தாழைமலரின் தாதிற்படிந்து கருநிறம்மாறி வெண் ணிறம் படைத்த வண்டுகள் கழிகளில் மலர்ந்துள்ள பூக்கள்தோறும் இசைபாடிச் சென்று தேனுண்டு திரியும் காட்சி வெண்ணீறு அணிந்து இறைவனது புகழை இசையொடுபாடி மனைதொறும் சென்று ஐயமேற்றுண்ணும் தொண்டர் செய்கையைக் காட்டும்.

பரதவர் தம் திமில்களில் சென்று கொணர்ந்து மீன்களைக் குவிப் பர். நுளைச்சியர் சங்குகளையும் இப்பிகளையும், அவையீன்ற முத்துக் களையும், பவளங்களையும் உப்புக்குவியல்களையும் தனித்தனி குவிப்பர். இவற்றின் வாணிபத்தில் வரும் பெரும் பொருளால் நெய்தனில மாக் கள் குறைவற வாழ்வர்.

அரசர்கள்.

இத்தகைய வளம்பொருந்திய இந்நாட்டைப் பல்லாயிரம் ஆண்டு களாக ஆண்டுவந்தவர்கள் படைப்புக் காலந்தொட்டுச் சிறப்புப் பெற்றிருந்த சோழமன்னராவர். அவர்களது நீதி வழுவா நெறி முறைக்கு ஆவின் கடைமணி உகுநீர் தன் நெஞ்சு சுடத்தன் ஒரு மைந்தன்மேல் தேர் விடுத்து நீதி வழங்கிய மனுச்சோழனே போதிய சான்ருவான். அவர்கள் வீரத்திற்கு இமய முதல் குமரிவரை என்ப தல்லாமல் ஈழமும் தம் ஆட்சியில் அடங்க ஒரு மொழி வைத்து உல காண்ட கரிகால்வளவன், முதலாம் இராசராசன், கங்கை கொண்ட சோழன், முதலியோர்களே போதிய சான்ருவர்.

இச் சோழமன்னர் அற நெறி பிறழாது, சிவபத்தி குன்ருமல் சைவமும் தமிழும் தழைக்க ஆண்டுவந்தனர். கரிகால்வளவன், கோச் செங்கணுன், முதலிய சோழர்களின் சிவபத்திச் சிறப்பை எவ்வா

றெடுத்துரைப்பது? இவர் தோன்றியிலரேல், இத்தனை சிவதலங்கள் எவ்வாறு தோன்றியிருக்கும்? தேவாரத் திருமுறைகள் எவ்வாறு நின்று நிலவும்? திருத்தொண்டர் புராணமென்னும் தெவிட்டா வமுது எவ்வாறு கிடைத்திருக்கும்? ஒரும் வேதாந்தத்துச்சியிற் பழுத்த சாரமாகிய சைவசித்தாந்தம் எவ்வாறு இன்றும் நிலவுவதாக ஆகும்? சோழ மன்னரேயன்றி அம்மரபிற் பிறந்த மங்கையர்க்கரசி யாரும் ஏனையோரும் சைவம் நிலைநாட்டிய தாய்மாரன்றோ? ஞானப் பாலுண்டு நான்மறை மொழிந்த ஞான சம்பந்தர் திருவாக்கினல் முன்னிலையில் வைத்துப் புகழப்பெற்ற பேறு இக் குலத்துப்பிறந்த பாண்டிமாதேவிக்கு வாய்த்ததுபோல் வேறு யாருக்கு வாய்த்தது? புறச்சமயப் படுகுழி வீழாது இறுதிவரையில் சைவநெறியில் நின்ற மன்னர்கள் சோழர்களே.

குடிகள்.

'மன்னன் எப்படி வையகம் அப்படி' என்பதற்கிணங்க, சோழ மன்னர்களாட்சியில் குடிகளும் சைவ நெறி பிறழாது வாழ்ந்து வந்தனர். அறுபான்மும்மை நாயன்மார்களில் பெரும்பாலோர் சோழ நாட்டினர். அம்மையின் ஞானப்பாலுண்டு, அமுதமயமாம் பாடல் மொழிந்து கொள்ளை கொள்ள வீடுதவிய பரசமயக் கோளரியார் பிறந்ததும் இத் திருநாடன்றோ? இத்தகைய பெரியோர் பலர் தோன்றியதாலும், பிற நாட்டிற் பிறந்த அடியார் பலர் (திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் இருந்த திருக்கூட்டம் போல) இந்நாட்டில் வதிந்தமையாலும் கிளிகள் நாகணவாய்ப் புட்கள் முதலிய பறவைகளும் திருநெறித் தமிழ்பாடும் சிறப்புப் பெற்றுள்ளது இந்நாடு.

கற்புடை மகளிர்.

'கொண்டானிற் றெய்வம் பிறிதில்லை' என்று குறிக்கொண்டு ஒழுகுபவரும், பெய்யென்று பணித்து மழை பெய்விப்பவருமாகிய இந் நாட்டு மகளிரின் கற்பின் பெருமைக்குக் கண்ணகி முதலிய கற்புடை மகளிர் அறுவருமே சிறந்த சான்றுவர். காரைக்காலம்மையார், ஆதி மந்தியார், போன்ற நல்லிசைப் புலமை மெல்லியர்களால் இந்நாட்டுப் பெண்களது புலமையும் பத்தியும் கற்பின் திறனும் தெள்ளிதிற் புலனாகும்.

சிவதலங்கள்.

தொண்டர்குழாம் திரண்டு மூர்த்தி தலம்தீர்த்தங்களை முறையே வழிபட்டு இம்மை மறுமைப் பயன்களையெய்தி இன்புறற் பொருட்டாக இறைவன் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் தலங்கள் இந் நாட்டில் உள்ளனபோல், வேறு எந் நாட்டில் உள்ளன. கோயில் என்று சிறப்புப் பெயர் பெற்றதும் எம்மிறைவன் ஐந்தொழில் திருக் கூத்து அநவரதம் ஆடுகின்ற சிறப்புடன் திகழப் பெற்றதும் ஆகிய சிதம்பரம் தன்பால் அமையப் பெற்றது இந்நாடன்றோ? வன்றொண்டப் பெருந்தகையை இடித்துரைத்துத் திருத்தொண்டத்தொகை தோற்றுவித்த அன்பர் கூட்டம் பொலியும் திருவாரூர் இந் நாட்டின் கண் அன்றோ உள்ளது?

இந் நாட்டின் பெருமையனைத்தும் எடுத்தியம்ப இமையவராலும் இயலுமோ?

தமிழ் நாடு நாடகக்கலை (2-வது) மாநாடு.

1945 மார்ச்சு 31, ஏப்ரல் 1 ஆகிய இருநாட்களிலும் இம்மாநாடு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்தேறியது. அவ் வமையம் திருமதி. P. S. சிவபாக்கியம் அவர்கள் கொடியேற்றினர். வைரம் உ. அருணசலம் செட்டியாரவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தனர். தஞ்சை நகரத்தந்தை இராவ்பகதூர். A. Y. A. நாடார் அவர்கள் வரவேற்புரை வழங்கினுர். நாடகப் பேராசிரியர் இராவ்பகதூர். P. சம்பந்த முதலியார் அவர்கள் தலைமை ஏற்று அரிய உரை வழங்கினுர். திருவிதாங்கூர்ப்பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் சி. பன்னிருகைப் பெருமாள் முதலியாரவர்கள் மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின்படத்தினையும், மதுரை, பாஸ்கரதாசன்அவர்கள் உடுமலை சரபம் முத்துச்சாமிக் கவிராயர் அவர்கள்படத்தினையும் திறந்துவைத்தனர். அன்றுபிற்பகலில் திருவாளர். T. V. சிவஞான கோவிந்தசாமி, M. கருப்பையா, V. A. அரங்கசாமி, K. P. தங்கவேல் நாடார், T. K. முத்துச்சாமி, A. சக்கரவர்த்தி, S. D. சுந்தரம், P. S. வேங்கடகிருட்டினப்பிள்ளை, A. குழந்தைவேலன், ஆகிய தோழர்கள் விரிவுரையாற்றினர். T. N. சிவதாணு எழுதிய 'நகைச்சுவை' என்னும்கட்டுரையை மாணவர் K. திருமாறன் படித்தார்.

இரண்டாம் நாட்காலையில் ஆய்வுக் குழுவினர் பல அரிய முடிபுகளைத் தேர்ந்தனர். பிற்பகலில் அம்முடிபுகள் நிறைவேற்றப்பட்டன. இராவுபகதூர். A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்கட்கு, '**முத்தமிழ்வள்ளல்**' எனவும்,இராவ்சாகிபு. ஐ. குமாரசாமிபிள்ளை அவர்கட்கு '**முத்தமிழ்ப்புரவலர்**' எனவும், வைரம். அருணசலம்செட்டியாரவர்கட்கு '**நாடகப்புரவலர்**' எனவும், P. S. சிவபாக்கியம் அம்மைக்கு '**தமிழிசைக் குயில்**' எனவும், P. S. சுப்பா ரெட்டியார் அவர்கட்கு, '**நாடகக்கலைச் செல்வர்**' எனவும் பட்டங்கள் வழங்கப்பெற்றன.

பின்னர், K. A. P. விசுவநாதம் அவர்களின் விரிவுரை நிகழ்ந்தது. தலைவர் பின்னுரை வழங்கியருளினுர். மாநாட்டுக் கூட்டமைச்சர் T. V. இரத்தினசாமி அவர்கள் யாவருக்கும் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. மாநாட்டு முடிபுகளும், நிகழ்ந்த விரிவுரைகளும் பின்னர் நூல்வடிவில் வெளிவரும். அன்றிரவு சென்னைச் சோதிகான சபையாரால் 'இழந்த காதல்' என்ற நாடகம் மாநாட்டுக்கு வந்தவர்கட்கு இலவசமாக நடித்துக்காட்டப்பட்டது.